# புறநானூறு காட்டும் வீரம்

***ச. வேளாங்கண்ணி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெய்க்காலிபட்டி, மேட்டூர்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958677

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்க காலத்தில் மக்கள் காதல், வீரம் இவற்றை இரு கண்களாகப் போற்றி வாழ்ந்தனர். வீரத்தில் சிறந்த ஆண்மகனைத் தான் ஒரு பெண் திருமணம் செய்து கொள்வாள். அத்தகைய நிலை தான் சங்க காலத்தில் இருந்தது. ஒரு தாய் ஆண் மகனைப் பெற்றெடுத்து, ஆளாக்கி வீரத்தில் சிறந்தவன் ஆவதற்குரிய ஊக்கத்தையும், துணிச்சலையும் கற்றுக் கொடுப்பாள். அதன் மூலம் அவன் போர் களத்திற்குச் சென்று போரில் வெற்றி பெற வேண்டும் அல்லது போரில் விழுப்புண் பட்டு இறக்க வேண்டும். இதைத் தான் அந்த தாய் பெருமையாகக் கருதுவாள். இத்தகைய பெருமைக்குரிய பெண்களின் வீரத்தையும், ஆண் மகனின் வீரத்தையும் பற்றி எட்டுத்தொகை நூலிலுள்ள புறநானூறு நமக்கு எடுத்துக் கூறுகிறது. இத்தகைய வீரத்தைப் பற்றி தான் ஆய்வு மேற்க்கொள்ளப் படுகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *வீரம், புகழ், பெருமை, மகிழ்ச்சி, துணிச்சல், உயர்சிந்தனை, அறச்செயல், கடமையுணர்வு, தன்மானம்.*

## முன்னுரை

சங்க காலத்தில் தமிழர்கள் வீரத்தில் சிறந்தவர்களாக வாழ்ந்தனர். “சான்றோன்” என்ற வார்த்தை வீரத்திற்கும் பொருத்தமானதாகும். போர்க்களத்தில் ஆண்கள் மட்டும் தான் வீரச் செயல்களில் ஈடுபடுவார்கள். அவர்களுக்கு மட்டும் தான் வீரம் இருக்கிறது என்பது கிடையாது. பெண்களும் வீரச் செயல்களில் ஈடுபட்டு வந்தார்கள். ஆண்கள் போருக்குச் செல்லும் போது போரில் வெற்றி பெருவதற்கான போர் யுத்திகளை வழி வகுத்துக் கொடுத்தார்க.ள். ஆண்களை போருக்கு துணிச்சலோடு அனுப்பி வைப்பதே பெண் தான். அத்தகைய வீரப்பெண்மணிகள் வாழ்ந்து வந்தனர். பெண்பாற் புலவர்கள் வீரத்தில் சிறந்த மன்னர்களை புகழ்ந்து பாடினர். அவர்களுக்கு ஆலோசனை சொல்லக் கூடிய வகையில் மதி நுட்பம் உடையவர்களாகவும், போரை அறவழியில் நடத்திச் செல்வதற்கைன வழிமுறைகளையும் கற்றுக் கொடுத்தனர் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## போர் முறைகள்

சங்க காலத்தில் இரு நாட்டு மன்னர்களுக்கும் இடையில் போர் நடைபெற இருக்கிறது என்றால் அந்தந்த நாட்டு மன்னர்கள் அந்தந்த ஊரில் போருக்குச் செல்பவர்கள் தவிர மற்றவர்களுக்கு பாதுகாப்பான இடத்தை தேடி கொடுத்து விட்டுத் தான் போரைத் தொடங்குவார்கள் என்பதை புறநானூற்றில்,

**ஆவும்,ஆனியற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும்,பிணியுடை யீரும் பேணித்**
**......**
**அறத்து ஆறு நுவலும் பூட்கை..................**
**புறநானூறு பாடல் எண் - 9: 1-6**

இப்பாடல் வரிகளில் போர் நடைபெறுவதற்கு முன் பசுவும், பசு போன்ற இயல்புடைய பார்ப்பனரும், பெண்டிர், உடல் நோய் உள்ளவர், இறந்த முன்னோர்களுக்கு கடன் செலுத்தும் குழந்தை பேறு இல்லாதவர் அனைவரும் பாதுகாப்பான இடம் நோக்கிச் சென்றிடுங்கள். இங்கே அம்பு பாயும் போர் நடக்க உள்ளது என்று கூறி விட்டுத்தான் போரை நிகழ்த்துவார்கள் என்று நெட்டிமையார் கூறுகிறார்.

## அறப்போர்

சங்க காலத்தில் மன்னர்கள் போரை நடத்துவதற்கு என்று சில வழிமுறைகள் உண்டு. எந்த நேரத்தில் எப்படி யாருடன் போரிட வேண்டும் என்பதை அறிந்து கொண்டு அறவழியைப் பின்பற்றி போரை நிகழ்த்துவார்கள் என்பதைப் பற்றி புறநானூற்றில்,

**அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்**
**தாம்மாய்ந் தனரே;குடைதுளங் கினவே;**
**உரைசால் சிறப்பின் முரசு ஒழிந்தனவே**
**புறநானூறு பாடல் எண் - 62:7-9**

இப்பாடல் வரிகளில் போர்களத்தில் படைவீரர்கள் மாண்ட பின்னர் அரசன் சோழன் வேற்பறடக்கைப் பெருவிறற்கிள்ளியும், சேரன் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் அறப்போரில் ஈடுபட்டனர். இருவரும் போரில் போர்க்களத்திலேயே மாண்டனர். இருபெரு வேந்தனின் குடைகளும், முரசுகளும் சாய்ந்து கிடந்தன என்று கழாத்தலையார் கூறுகிறார்.

## கடமையுணர்வு

சங்க காலத்தில் அவரவர் தத்தம் வேலைகளை கடமையுணர்வோடு செய்து வந்தனர். ஒரு ஆண்மகன் பிறந்து விட்டால் அந்த மகனுக்கு யார்யார் என்னென்ன கடமைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.என்பதைப் பற்றி புறநானூற்றில்,

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,**
**களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.**
**புறநானூறு பாடல் எண் - 312**

இப்பாடல் வரிகளில் குழந்தையை பெற்றெடுத்து பேணிப் பாதுகாப்பது ஒரு தாயின் கடமை. அவனை படிக்க வைத்து சான்றோனாக்கி வீரத்திலும் சிறந்து விளங்கச் செய்வது ஒரு தந்தையின் கடமை. போருக்கு செல்வதற்குரிய வாளை வடித்துக் கொடுப்பது ஒரு கொல்லனின் கடமை. அவனுக்கு நன்னடத்தைகளை கற்றுக்கொடுப்பது ஒரு வேந்தனின் கடமை. வாளை சுழற்றி போர்க்களத்தில் பகைவேந்தன் யானையை வீழ்த்தி விட்டு வெற்றியுடன் திரும்புதல் தன் மகனாகிய காளையின் கடமை என்று வீரத்தின் சிறப்பினைப் பற்றி பொன்முடியார் கூறுகிறார்.

## புகழ்

சங்க காலத்தில் மன்னர்களின் நல்லாட்சி, போர்த்திறம், கல்வி, கொடை இவற்றைப் பொருத்து தான் ஒருவருக்கு பெயரும், புகழும் கிடைக்கும். ஒவ்வொரு மன்னர்களின் புகழையும், ஒவ்வொரு புலவர்களும் பாடிப் புகழ்ந்து பரிசில்களும் பெறுவர். பாடல்களும் இயற்றுவர் என்பதனைப் பற்றி புறநானூற்றில்,

ஒருவனை ஒருவர் அடுதலும்,தொலைதலும்
**புதுவது அன்று இவ்வுலகத்து இயற்கை**
**புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க,**
**ஒருதான் ஆகிப் பொழுது,களத்து அடலே!**
**புறநானூறு பாடல் எண் - 76**

இப்பாடல் வரிகளில் தலையாலங்கானத்துப் போர்க் களத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் ஏழு அரசர்களை எதிர்த்துப் போரிட்டதை கண்ட புலவர் ஒருவனை ஒருவன் தாக்கி போரிடுவதும், அப்போது ஒருவனோ அல்லது இருவனோ மாண்டு போவதும் இயல்பு தான். ஆனால் ஒருவன் ஏழுபேரைத் தாக்கி அழித்தல் என்பது புதுமையாகும். ஆனால் பசும்பூண்

செழியனின் பெருமையையும், செம்மாப்பையோம் அறியாமல் எதிர்த்து வந்த எழுவரின் கொட்டத்தை அடக்க வேப்பம்பூவும், உழிஞையும் சேர்த்து தலையில் சூடிக் கொண்டு கிணைப்பறை முழக்கத்துடன் போரிட்டு அழித்ததை இன்று தான் கண்டோம் என்று இடைக்குன்றூர் கிழார் கூறுகிறார்.

**தன்மானம்**

சங்க காலத்தில் மன்னர்கள் போர்க்களத்தில் மான உணர்வோடு தான் போரில் ஈடுபடுவர். சேரமான் கணைக்கால் இரும்பொறை சே ரமன்னன். இவன் சோழன் செங்கணான் என்பனோடு போரிட்டு அவனால் சிறைபிடி க்கப்பட்டு சிறையில் இருக்கும் போது தாகத் திற்கு தண்ணீர் கேட்டான் காவலன் தாமதமாக கொண்டு வந்து கொடுக்கவே அதை வாங்கி குடிக்காமல் ஒரு பாடலை பாடினார் என்பதை புறநானூற்றில்,

***குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,***
***ஆள் அன்று என்று வாளின் தப்பார்***
***ஈன்ம ரோ, இவ் உலகத் தானே?***

**புறநானூறு பாடல் எண் - 74**

இப்பாடல் வரிகளில் பிறந்த குழந்தை இறந்து பிறந்தாலும், உணவுப் பிண்டமாகப் பிறந்தாலும் பிறந்தது வீரம் உடையது அன்று என்று எண்ணி அதனை வீரமுடையதாக்க வாளாள் வெட்டித்தான் ஈமக்கடன் செய்வது வழக்கம். அப்படி இருக்க நான் இப்படிப்பட்ட ஈன நிலையை அடையனுமோ என்று கூறி விட்டு தன்மானத்தோடும், வீர உணர்வோடும் தன்னுயிரை ஈந்தார் என்று கூறப்படுகிறது.

**துணிச்சல்**

சங்க காலத்தில் பெண்கள் ஆண்களை விட வீரத்தில் சிறந்து விளங்கியவர்கள். அவர்கள் எந்த ஒரு காரியத்தில் ஈடுபட்டாலும் பயப்படவோ, பின் வாங்கவோ மாட்டார்கள். துணிந்து இறங்கி செயல்படுவார்கள். ஆண்களுக்கு துணிச்சலைக் கொடுப்பதும்,.துணிச்சலோடு போருக்கு அனுப்புவதும்.பெண் தான். அத்தகைய துணிச்சலை போர்க்களத்தில் தன்னுடைய இளம் பச்சிளம் குழந்தைக்கு வேல் கொடுத்து போருக்கு அனுப்பும் செய்தியைப் பற்றி புறநானூற்றில்,

***............................................கடிதுஇவள்***
***துணிவே***
***ஒருமகன் அல்லது இல்லோள்***
***செருமுக நோக்கி செல்க என விடுமே!***

**புறநானூறு பாடல் எண் - 279**

இப்பாடல் வரிகளில் இவளுடைய அண்ணன் முந்தைய நாள் போரில் யானையை வீழ்த்தி விட்டு தானும் போர்க்களத்திலேயே மாண்டான். நேற்று நடந்த போரில் இவளது கணவன் போரில் மாண்டான். மீண்டும் போர்க்களத்தில் பறை ஒலிக்கப்பட்டது. ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காக வெண்ணிற ஆடை அணிந்து தலையில் எண்ணெய் தேய்த்து சீவி முடிந்து கொண்டு தன்னுடைய ஒரே மகனை பச்சிளம் குழந்தையைப் பார்த்து வேலைக் கையிலே கொடுத்து "போர்க்களம் நோக்கிச் செல்க" என்று கூறி அனுப்பி வைத்தாள். இத்தகைய பெண்ணின் வீரத் துணிச்சலைப் பற்றி ஒக்கூர் மாசாத்தியார் எடுத்துரைக்கிறார்.

**மகிழ்ச்சி**

சங்க காலத்தில் பெண்கள் ஆண்மகனை பெற்றெடுப்பதில் பெருமகிழ்ச்சி அடைவர். அவனை வளர்த்து, ஆளாக்கி, சான்றோனாகவும், வீரத்தில் சிறந்தவனாகவும், விளங்க வேண்டும். அதனைக் கேட்டு பெருமகிழ்ச்சி அடைய வேண்டும் என்று எண்ணுவாள். அத்தகைய எண்ணத்தைப் பற்றி புறநானூற்றில்,

***....................சிறுவன்***
***களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை***
***ஈன்ற ஞான்றினும் பெரிதே..........................***

**புறநானூறு பாடல் எண் - 277: 2-4**

இப்பாடல் வரிகளில் வயது முதிர்ந்த தாய் தன் மகன் போர்க்களத்தில் யானையைக் கொன்று தானும் மாண்டு விட்டான் என்ற செய்தியைக் கேட்டு தான் பெற்றெடுத்த மகிழ்ச்சியை விட, பெருமகிழ்ச்சி அடைந்தாள் என்று பூங்கணுத் திரையார் கூறுகிறார்.

**உயர்சிந்தனை**

சங்க காலத்தில் பெண்கள் தங்களுடைய பிள்ளைகளைக் குறித்து எப்பொழுதுமே உயர்வான சிந்தனைகளை கொண்டிருப்பாள். அத்தகைய எண்ணத்தை நிறை வேற்றுவதிலே கண்ணும், கருத்துமாக செயல்படுவாள். தன் மகன் வீட்டை விட்டு வெளியே சென்றால் அவன் எங்கே இருப்பான் என்று தன் சிந்தனையில் இருத்திக் கொள்வாள் என்பதைப் பற்றி புறநானூற்றில்,

**சிற்றில் நற்றூண் பற்றிநின் மகன்**

**...................**

**...................**

**தோன்றுவான் மாதோ போர்க்களத் தானே!**

**புறநானூறு பாடல் எண் - 86**

இப்பாடல் வரிகளில் ஒரு தாய் வீட்டின் தூணைப் பற்றிக் கொண்டு போர் வீரர்கள் உன் மகன் எங்கே உள்ளான் என்று கேட்டனர். அதற்கு அத்தாய் அவன் எங்குள்ளானோ எனக்குத் தெரியாது. ஆனால் புலி வெளியேறிய கல்குகை போன்று அவனை பெற்றெடுத்த வயிறு தான் இது. ஆகவே அவன் இப்பொழுது போர்க்களத்தில் தான் இருப்பான். சென்று காணுங்கள் என்று காவற்பெண்டு பாடல் மூலம் உணர்த்தினார்.

**நிறையுரை**

சங்க காலத்தில் மன்னர்கள் முதல் சாதாரண மக்கள் வரை வீரத்தையும், தன்மானத்தையும் முதன்மையாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். அறநெறியில் போர்செய்வதை முறையாக கொண்டிருந்தனர். அதுவும் பெண்கள் ஆண்களை விடவும் வீரமும், துணிச்சலும் மிக்கவர்களாக வாழ்ந்து காட்டினர். ஒரு ஆண் மகனைப் பெற்றவள் தன்னை பெருமை படுத்திக் கொள்வாள். அவன் போரில் விழுப்புண் பட்டு இறப்பதைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைவாள். அத்தகைய பெருமையையும், புகழையும் பெண்கன் நாட்டிற்கு ஈட்டிக் கொடுத்தனர் என்பது பெருமைக்குரியதாகும். போருக்குச் செல்லும் ஆண்களுக்கு வீரத்தையும், துணிச்சலையும் ஊட்டுவதே பெண் தான். பெண்பாற் புலவர்கள் வீரத்தில் சிறந்த மன்னனைத் தான் பாராட்டி, புகழ்ந்து போற்றுவர். ஆண்மகனாகப் பிறந்தவனுக்கு வீரமே தலையாயக் கடனாகும். அத்தகைய வீரத்தோடு வாழ்ந்து காட்டுவதே அர்த்தமுள்ளதாகும், பெருமைக்குரியதாகும், போற்றுதற்குரியதாகும், புகழ்வதற்குரிதாகும் என்பதை பற்றி புறநானூறு வழியாக அறிந்து கொண்டோம்.

**துணை நின்ற நூல்கள்**

1. புறநானூறு மூலமும் உரையும் - கு. வே. பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. சங்க கால வாழ்வியல் - ந. சுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, வெளளியீடு - 1986.
3. சங்க இலக்கியம் - எஸ். வையாபுரிபிள்ளை, பாரி நிலையம், முதல் பதிப்பு, வெளியீடு - 2015.
4. புறநானூறு மூலமும் உரையும் - புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, வெளியீடு - 2010.
5. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் - புலியூர் கேசிகன், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, வெளியீடு - 2020.